<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 513/2021**</u>

<u>**வழக்கு சாட்சி PW–14**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நீத்து சாபு | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சாபு | தொழில் | : | வங்கி மேலாளர் |
| கிராமம் | : | குணராமநல்லூர் | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 18.06.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது குணராமநல்லூர் கனரா வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது வங்கியில் இ.ரமேஷ், த/பெ.வேம்பு, 155 வடக்கு தெரு, இராமலிங்கபுரம், தென்காசி என்பவரின் Savings Account No.3656101008707 ல் கணக்கு உள்ளது. அவர் எங்கள் வங்கியில் நகைக்கடன் 28.09.2020 ல் 1 செயின் – 39.9 கிராம் (Gross Weight), 36 கிராம் (Net Weight) எடையுடையதை வங்கிக்கணக்கு எண்.3656842038835 என்ற கணக்கில் கோல்டு லோன் வைத்து ரூ.1,25,000/– பெற்றுள்ளார்.

09.10.2020ம் தேதி போலீசார் வந்து அந்த நகை திருட்டு நகை என திரும்ப பெற்றுள்ளார்கள். ரமேஷ் என்பவரின் வங்கி கணக்கின் கோல்டு லோன் மற்றும் அவரது வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அதற்கான ஆவணம் எங்கள்

வங்கி கோப்பில் எனது பொறுப்பில் தான் இருந்தது. அதன் நகல் எடுத்து வந்துள்ளேன். அது அ.சா.ஆ.19 ஆகும்.

(சாட்சி சில ஆவணங்கள் எடுத்து வராததினால் முதல் விசாரணை பாதியில் நிறுத்தி தேதி ஒத்தி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 11:50:03 +0530